<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருநெல்வேலி</u>
<u>O.S.No.55/2022</u>

11.10.2023. பி.வா.சா.2 திரு.ராயப்பன்

<u>வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. பரமேஸ்வரியின் வாரிசுகள் இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். நான் இவ்வழக்கில் பிரதிவாதி கிடையாது என்றால் சரிதான். என் மீது வாதிகள் எந்த பரிகாரமும் கேட்டுவிரல்லை என்றால் ரிதான். வாதிகள் கோரியுள்ள வழக்கு பரிகாரம் என்னவென்றால் 03.06.2013 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் செல்லதக்கதல்ல என கட்சி செய்கிறார்கள்.
2. பிரதிவாதிகள் செய்து கொண்ட 03.06.2013 தேதியிட்ட பாகப்பிரிவினை ஆவணம் குறித்து எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் எந்த சொத்தை யார் யாருக்கு பாகம் வைத்து கொண்டனர் என்ற விவரம் தெரியாது என்றால் ஆவணத்தில் உள்ள விவரங்கள் தெரியாது. நான் காலம் சென்ற வேதநாயகத்தின் அக்கா மகன் என்ற அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன்.
3. சொத்து வேதநாயகத்திற்கு பாத்தியப்பட்டது என்பது ஐயம்மில்லை. இதே நீதிமன்றத்தில் அ.வ.181/2021 என்ற வழக்கில் வேதநாயகத்தின் வாரிசுகள் யார் யார் என்று தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றால் சரிதான். வேதநாயகத்திற்கு 5 மனைவிகள், அவர் காந்தர்வ திருமணம், ஜெயகாந்திய திருமணம் செய்தது குறித்து நான் முதல் விசாரணியில் கூறியுள்ள விவரங்கள் நேரடியாக எனக்கு தெரியாது என்றால் சரிதான்.
4. வேதநாயகத்திற்கு 6 வாரிசுகள் இருக்கும் பட்சத்தில் பிரதிவாதிகள் இருவர் மட்டும் தாவா சொத்தை பங்கு வைத்து கொண்டது தவறு என்றால் சரிதான். வேதநாயகத்திற்கு 1ம் பிரதிவாதி மற்றும் வாதிகளின் தாயார் மட்டும் தான் வாரிசுகள் என்றும் நான் சொல்லுவது போல் 6 பேர்கள் எந்த காலத்திலும் வாரிசுகளாக இருந்தது இல்லை என்றால் சரியல்ல. 6

பேர்களுக்கும் வேதநாயகத்தின் சொத்து பாகம் வைக்க வேண்டும். நான் தாக்கல் செய்துள்ள முதல் விசாரணை வாக்குமூத்தை 2ம் பிரதிவாதி தயார் செய்து அதில் நான் கையொப்பம் செய்து நீதிமன்தற்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5. கரிகாலனுக்கு சாதகமாக பொய் சாட்சியம் செய்கிறேன் என்றால் சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் பற்றி எனக்கு நேரடியாக தெரியாது என்றும், நிருபண வாக்குமூலதில் கூறியுள்ள சங்கதிகள் அனைத்தும் 2ம் பிரதிவாதியால் தயார் செய்யப்பட்டது என்பதால் அதை ஏற்றுக்கொள்ள கூடாயது என்றால்சரியல்ல. வாதிகள் கோரியுள்ள பரிகாரம் கிடைக்கதக்கது என்றால் சரியல்ல.